சொல்வதுபோல, அந்தக் குற்றச்சாட்டுகள் அல்ல. அமைச்சர் எப்போது பேசினாலும், அண்ணா தி.மு.க.-வைத் தாக்கிப் பேசுவது என்பது வேடிக்கையாக இருக்கிறது. நீங்கள் சரியான முறையில் மருத்துவர்களை நியமித்தால் அதை நாங்கள் கேட்கப்போவதில்லை. மக்களும் ஏற்றுக்கொள்வார்கள். அதை மனதிலே வைத்துக்கொள்ளுங்கள். நீங்களே சொன்னீர்கள், வேதாரண்யம் மட்டுமல்ல; நாகப்பட்டினம் மற்றும் திருவாரூரிலே மருத்துவர்கள் செல்வதில்லை என்று நீங்களே இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறீர்கள். அதை ஏற்றுக்கொள்ளுங்கள் என்பதை மட்டும் நான் வலியுறுத்தி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அந்த 2 மாவட்டத்திற்கும் மருத்துவர்கள் செல்வதில்லை என்பதை ஒத்துக்கொண்டார்கள். இருந்தாலுங்கூட இன்றைய தினம், கலந்தாய்வுக் கூட்டம் நடத்தி, யார் அந்த மாவட்டங்களுக்குச் செல்கிறார்களோ அவர்களை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இன்றைய கலந்தாய்வுக் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு, யார் யார் அங்கே போக விரும்புகிறார்களோ அவர்களை அரசாங்கம் நியமிக்கும்.

4. திருப்பூர், புதிய மாவட்டம் உருவாகியமைக்கு நன்றியுரைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தமிழ்நாட்டினுடைய 32 வது மாவட்டமாக திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாகியிருக்கிறது. அதற்காக அந்தத் தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைச் சொல்ல தங்களிடம் அனுமதி கேட்டேன். தாங்கள் அனுமதித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2009 பிப்ரவரி 23] [திரு. சி. கோவிந்தசாமி]

கடந்த 2006 ஆம் ஆண்டு இதே சட்டப் பேரவையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே நான் முன்வைத்த கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டிலே இனி ஒரு புதிய மாவட்டம் உருவாகுமானால், அது திருப்பூராகத்தான் இருக்குமென்ற ஓர் உறுதியை இந்தச் சபையிலே அளித்தார்கள். அதோடு 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திருப்பூரிலே மாநகராட்சியைத் துவக்கி வைக்க வருகை தந்தபோது, அங்கேயும் நாங்கள் முன்வைத்த கோரிக்கையை ஏற்று, வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே இந்தப் புதிய மாவட்டம் குறித்து, நிச்சயமாக நல்ல செய்தியாகக் கிடைக்குமென்று தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் 2008–2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, ஒரு புதிய மாவட்டம், ஈரோடு பகுதியையும், கோவை பகுதியையும் இணைத்து உருவாகும் என்று அறிவிக்கப்பட்டு, அதனுடைய தொடர்ச்சியாக 24–10–2008–லே முறையான அரசாணை வெளியிடப்பட்டு 6 மாதங்களில் இந்த மாவட்டத்தைப் பிரிக்கும் பணிகள் நிறைவடைந்து, புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் நான்கு மாத காலத்திலேயே இந்தப் பணிகளெல்லாம் நிறைவடைந்து, நேற்றைய தினம் திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்ட தமிழ்நாட்டின் 32–வது புதிய மாவட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) உதயமாகியிருக்கிறது.

முற்பகல் 11–15

திருப்பூர் வட்டாரத்தினுடைய மக்களினுடைய நீண்ட நெடுநாளைய கோரிக்கையை, அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே, இந்த அரசிற்கும், குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும் எடுத்துச் சென்று, அந்தக் கோரிக்கைதனை ஏற்று, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நம்முடைய நிதியமைச்சர் அவர்களும், அதேபோல உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் இதற்கான பெருமுயற்சி மேற்கொண்டு புதிய மாவட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்தப் புதிய மாவட்டத்தினை உருவாக்கித் தந்த நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், நிதித் துறையின் சார்பிலே அதை அறிவித்துச் சிறப்பு சேர்த்த நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும், அந்த மாவட்டம் உருவாவதற்குப் பல முனைகளிலே துணைநின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

அவர்களுக்கும், துறையினுடைய அமைச்சர் மரியாதைக்குரிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, நேற்றைய தினம் திருப்பூருக்குப் பல்வேறு பணிகளுக்கு மத்தியிலும் நேரிலே வருகைதந்து புதிய மாவட்டத்தைத் துவக்கி வைத்து அதற்குப் பெருமை சேர்த்துத் தந்த நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் அவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே திருப்பூர் புதிய மாவட்ட மக்கள் அனைவரின் சார்பாகவும், திருப்பூர் தொகுதி மக்களின் சார்பாகவும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியை இந்த அவையின்மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், ஏற்கெனவே இந்த அவையிலும், நேரிலும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் திருப்பூருக்கு ஏராளமான வெளி மாவட்ட மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்; குடிப்பதற்குப் போதுமான குடிநீர் வசதி இல்லை; 10 நாட்களுக்கு ஒரு முறை குடிதண்ணீர் வழங்கப்படுகிற நிலைமையிருக்கிறது என்று சொன்னபோது, விரைவிலே ஒரு புதிய குடிநீர்த் திட்டம் அறிவிக்கப்படும் என்று அறிவித்தார்கள். நேற்றைய தினம் இந்த அவையிலேயே, தன்னுடைய மானியக் கோரிக்கை வருகிறபோது, நிச்சயமாக அரசாங்கம் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும் என்ற உறுதியை அளித்திருக்கிறார்கள்.

திருப்பூருக்கு இதுவரையில் 70 வழித் தடங்களில் புதிய பேருந்துகளுக்கான அனுமதியைத் தந்தார்கள். அந்தப் பேருந்துகளை நிறுத்துவதற்கு இட வசதி இல்லை என்று கேட்டபோது, திருப்பூரின் தெற்குப் பகுதியிலே ஒரு புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தரப்படும் என்ற உறுதியை நேற்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த மாவட்டத்தைத் துவக்கி வைத்ததோடு, திருப்பூர் தொகுதி மக்களின் இந்த இரண்டு முக்கியமான கோரிக்கைகளையும் விரைவில் நிறைவேற்றித் தரப்படும் என்று நேற்று உறுதியளித்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை திருப்பூர் தொகுதி மக்களின் சார்பாகவும், திருப்பூர் புதிய மாவட்ட மக்களின் சார்பாகவும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேச அனுமதித்த தங்களுக்கும் நன்றி சொல்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள்.

2009 பிப்ரவரி 23]

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குப் புதிய திருப்பூர் மாவட்ட உதய விழாவிற்குச் சென்றிருந்தபோது, அதைத் துவக்கி வைத்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, அவர்கள் அளித்த குறிப்பு எங்களையெல்லாம் மிகவும் ஆச்சரியப்பட வைத்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அருமை அண்ணன் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் இதே சட்டமன்றத்திலே பேசிய உரையினுடைய நகலையும், அதற்கு நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலையும், அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசி, 'அடுத்த மாவட்டம் அமைந்தால் அது திருப்பூர் மாவட்டமாகத்தான் இருக்கும்' என்கின்ற செய்தியைப் படித்தபோது வியந்துபோனோம். எப்படித் தலைவர் கலைஞர் அவர்கள் ஞாபக சக்திக்கு இருப்பிடமாக இருக்கிறாரோ, அதைப்போல அந்தச் சம்பவத்தை நினைவுகூர்ந்து பேசிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய ஞாபக சக்தியையும் நினைவுகூர்ந்து வியந்துபோனோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படிப் புதிய மாவட்ட அறிவிப்பு வெளிவந்தபோது, ஈரோடு மாவட்டத்திலேயிருக்கிற காங்கேயத்தையும், வெள்ளக்கோவிலையும், தாராபுரத்தையும் அதோடு இணைத்து--நான்கூட நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடத்திலே கூறினேன், நாங்களெல்லாம் விவசாயம் சார்ந்த மாவட்டத்தில் இருக்கிறோம்; திருப்பூர் பெரிய பனியன் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது என்று சொன்னபோது, 'பாலரோடு சேர்ந்து நீங்களும் முன்னேறுவதற்கு வாருங்கள்' என்று அழைத்தார்கள். அப்படி இணைந்திருக்கிறோம். அப்படிப்பட்ட இணைப்பு விழாவிலே காங்கிரஸ் கட்சியின் சார்பிலே புதிய மாவட்டத்திற்கு வரவேற்பு தெரிவிப்பதோடு, நேற்றைக்குக்கூட ஒரு கோரிக்கையை அவரிடத்திலே வைத்திருக்கிறேன். இரண்டு பெரிய பிரச்சினைகள் அங்கே இருக்கின்றன. திருப்பூரினுடைய சாயக் கழிவுக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தி, காங்கேயம் பேரூராட்சியை மாநகராட்சியாகவும் ஆக்கி, திருப்பூர் மாவட்டத்திற்கு மேலும் பெருமை சேர்க்குமாறு காங்கிரஸ் கட்சியின் சார்பிலே புதிய மாவட்டத்தை வரவேற்று, அந்த நல்ல அறிவிப்புக்கு (குறுக்கீடுகள்) பேரூராட்சியை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், உட்காருங்கள்.

[2009 பிப்ரவரி 23

திரு. விடியல் எஸ். சேகர்: பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து, இந்த நல்ல அறிவிப்புக்கு நன்றி பாராட்டி முடிக்கிறேன். நன்றி, வணக்கம். ஜெய் ஹிந்த்!

5. இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்தும், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் காவல் துறையினர் மற்றும் வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்தும், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கண்டன ஊர்வலங்கள் நடத்த அனுமதி கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இலங்கைத் தமிழர்களுக்காகப் பல்வேறு இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக இன்றைய தினம் மாநிலம் முழுவதிலும் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக அனுமதி கோரப்பட்டு, அது நடைபெறுவதற்குரிய முயற்சி எடுக்கப்பட்ட நேரத்தில், தமிழ்நாடு காவல் துறை பல மாவட்டங்களில் அனுமதி மறுத்து தடை செய்திருக்கிறது. அங்கே தமிழ் மக்கள் பாதிக்கப்படுவது குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, இன்றைய தினம் அறிக்கை மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு வைத்திய சிகிச்சை செய்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 35,000–த்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே அங்கே பாதிக்கப்படுகின்ற தமிழர்களுக்கு தமிழகத்திலே குரல் கொடுப்பதற்கும், போராடுவதற்கும் தடை என்பது, சரியான கருத்தாக இல்லையே? இந்தத் தடையை காவல் துறை விதிக்கிறதே, இதில் அரசுக்குச் சம்பந்தம் இருக்கிறதா? இல்லையா? அரசு இப்படிப்பட்ட இயக்கங்கள் நடத்துவதற்குத் தடை செய்வது என்பது, தமிழகத்தினுடைய உணர்வுகளை திசை திருப்புவதாக அமைந்துவிடுமே, இதைப் பற்றி அரசு என்ன கருதுகிறது? அந்தத் தடையை நீக்கி, இயக்கங்களை நடத்தச் செய்வதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்பதை இந்த அவையின்மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.